**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 315/2023**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

வா.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்.,சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**PW- 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கிருஷ்ணமூர்த்தி | த/பெ.: | சிங்காரம் |
| கிராமம்: | சித்தன்வாளூர் | தாலுக்கா: | வலங்கைமான் |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 70 | முகவரி: | வடக்கு தெரு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **24.03.2026.**

**முதல் விசாரணை :-**

நான் வழக்கில் வாதி தரப்பு சாட்சி 2 ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பில் சான்று ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கிராம நிர்வாக அலுவலக உதவியாளராக எவ்வளவு காலம் பணி செய்தேன் என்றால் - 33 வருடங்கள் சித்தனவாளூரில் பணி செய்தேன். எந்த வருடம் பணி ஓய்வு பெற்றேன் என்றால் - 2013 ல் பணி ஓய்வு பெற்றேன். அரசாங்க வேலையில் உள்ளவர்கள் குத்தகை சாகுபடி செய்ய முடியாது என்றால் - சரிதான். நான் 1964 லிருந்து நேரடி சாகுபடி செய்து வந்ததாக சொல்வது தவறு என்றும் எனக்கு எந்த சாகுபடி சொத்துக்களும் கிடையாது என்றால் - சரியல்ல. கணேஸ்பாபுவின் முந்தைய உரிமையாளர்கள் யார் என்று எனக்கு தெரியாது. கணேஸ்பாபுவின் முந்தைய உரிமையாளர்கள் பற்றி அபிடவிட்டில் ஏதேனும் சொல்லியிருந்தால் - அது தவறாகும். 2013 க்கு பிறகு தான் நான் பணி ஓய்வு பெற்றபின்பு உள்ள விவரங்கள் தான் எனக்கு தெரியும் என்றால் - சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியும். வழக்கு சொத்திற்கு கீழ்புறம் என்ன சர்வே எண் உள்ளது என்றால் - நடராஜன் சொத்துள்ளது. ராஜாவிற்கு அந்த ஊரில் மொத்தமாக எவ்வளவு சாகுபடி சொத்துள்ளது என்றால் - எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் யார் சொன்னது என்றால் - அந்த ஊர் கிராம நிர்வாக உதவியாளராக இருந்ததால் தெரிந்துக்கொண்டேன். யாரேனும் சாகுபடி செய்திருந்தால் அடங்கல் காலத்தில் அவர்களின் பெயர் வரும் என்றால் - வராது. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நான் சொல்வதுபோன்று வழக்கு சொத்துக்களை ராஜா எந்த தேதியிலும் சாகுபடி செய்தது கிடையாது என்றால் - சரியல்ல. எனக்கு தாவா சொத்திற்கு அருகில் எந்த சாகுபடி சொத்தும் கிடையாது

என்றால் - சரியல்ல. 1964 லிருந்து நான் நேரடி சாகுபடி செய்து வருவதாக சொல்லியிருப்பது தவறு என்றால் - சரியல்ல. 2008 லிருந்து ராஜா சாகுபடி செய்து வருவது எனக்கு தெரியும் என்று சொல்லியிருப்பது தவறு என்றால் - சரியல்ல. சித்தன்வாளுர் கிராமத்தில் 20.10.2023 ல் யார் யார் இருந்தார் என்றும் என்ன சண்டை என்பதும் எனக்கு தெரியாது என்றால் - சரிதான். கூட்டமாக இருந்தார்கள் போலிசாரும் இருந்தார்கள் நான் பார்த்தேன். வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணமான அடங்கல் காலத்தில், யார் சாகுபடி செய்தார்கள் என்ற காலம் உள்ளது என்றால் - சரிதான். ஆனால் அதில் நாங்கள் எழுதமாட்டோம். அரசாங்கம் எழுதக்கூடாது என்று சொல்லியுள்ளது.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.